**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, TIRUPATTUR**

| | |
|---|---|
| SC.No. | 208/2021 |
| Deposition of Witness for | PW-11 |
| Time | 12.32 PM to 12.38 PM |

| | | | |
|---|---|---|---|
| 1 | NAME | : | நாமதேவன் |
| 2 | FATHER NAME | : | சின்னசாமி |
| 3 | VILLAGE | : | |
| 4 | TALUK | : | |
| 5 | AGE | : | |
| 6 | OCCUPATION | : | உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with be provisions of Act of 1873 on the day of 14.07.2026

***முதல் விசாரணை***

சாட்சி ஆஜர்.அனைத்து எதிரிகளும் ஆஜர்.அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

1. தற்பொழுது நான் திருப்பத்தூர் மாவட்டத்தில் மாவட்ட கண்காணிப்பாளர் நேரடி பார்வையில் உள்ள தனி பிரிவில் காவலூர் காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணி புரிந்து கொண்டிருக்கின்றேன். நான் 17.11.2017 ஆம் தேதி ஏலகிரி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது பகல் 2 மணிக்கு ஆறுமுகம் தந்தை பெயர் பழனி என்பவர் காவல் நிலையம் ஆஜராகி புல எண் 13/1எ1 சொத்து தொடர்பாக ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக புகார் மனு கொடுத்தார். மேற்படி புகாரினை நான் பெற்று புகார் ஏற்பு மனு ரசீது எண்.46/2017 பதிவு செய்து அதனை மேல்விசாரணைக்காக காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். இது தொடர்பாக என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

2. மேற்படி ஏலகிரி காவல் நிலையத்தில் நான் எந்த தேதி முதல் எந்த தேதி வரை பணிபுரிந்தேன் என்று கேட்டால் ஞாபகம் இல்லை. எங்களுடைய காவல்

நிலையத்தில் ஆறுமுகம் என்பவர் 17.11.2017 ஆம் தேதி வந்து ஆறுமுகம் புகார் கொடுக்கும் போது பிரச்சனையில் உள்ள சொத்து தனக்கு பாத்தியப்பட்ட சொத்து என சொல்லி அதனுடன் தொடர்புடைய வருவாய் துறை ஆவணங்களை இணைத்து புகாரினை கொடுத்தாரா என்று கேட்டால் இல்லை, புகார் மட்டும் தான் கொடுத்தார். என்னிடம் கொடுத்த புகாரின் அடிப்படையில் நான் எதிரிகளை அழைத்து விசாரணை செய்தேனா என்று கேட்டால் இல்லை, நான் மேல்விசாரணைக்காக ஆவண கோப்புகளை ஒப்படைத்து விட்டேன். சாட்சி ஆறுமுகம் தவறாக கொடுத்த புகாரினை நான் எந்தவித விசாரணையும் மேற்கொள்ளாமல் மேல்விசாரணைக்காக ஒப்படைத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, திருத்தம் செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பித்து, அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

A SARIDHA Digitally signed by A SARIDHA

சார்பு நீதிபதி

சார்பு நீதிமன்றம், திருப்பத்தூர்